# தாய் திட்டம்

குக்கிராமங்களை அடிப்படை அலகாகக் கொண்டு வளர்ச்சிப் பணிகள் மேற்பொள்ளும் தாய் திட்டம் கடந்த 5 ஆண்டுகளாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தாய் திட்டத்தின் கீழ் ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பில் உள்ள சிறுபாசன ஏரிகள் விரிவான முறையில் புனரமைப்பு செய்யப்படும். இந்த ஏரிகளில் உள்ள முட்புதல்களை அகற்றி இயந்திரங்களின் மூலம் ஏரிகள் துர்வாரப்படும், மதகு மற்றும் கலங்கல்கள் புதிதாக கட்டப்பட்டு, கரைகள் பலப்படுத்தப்படும். இதன் மூலம் குக்கிராமங்களில் குடிநீர் தட்டுப்பாட்டினை களையவும், நிலத்தடி நீர்மட்டத்தினை உயர்த்திடவும், சிறுபாசன ஏரிகளின் முழ கொள்ளளவினை மீட்கவும், குடிநீர் விவசாயத் தேவைகளுக்கான நீரினை முறைப்படுத்தவும் வழிவகை ஏற்படும்.

இந்தி ஆண்டில் ரூ.300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1200 சிறுபாசன ஏரிகளை புனரமைத்து மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும். இதனால ஏரிகளில் சேமிக்கப்படும் நீரின் அளவு அதிகரிப்பதுடன் நிலத்தடி நீர்மட்டமும் அதிகரிக்கும். மேலும் ஊரகப்பகுதிகளில் விவசாயப் பரப்பளவு அதிகரிப்பதுடன், ஊரக பொருளாதாரம் உயரவும் வழிவகுக்கும்.

**நோக்கம்.**

இத்திட்டத்தின் நோக்கமானது கிராம ஊராட்சிகளில் உள்ள குக்கிராமங்களுக்கு குறைந்தபட்ச அடிப்படை வசதிகளை செய்து தருவதாகும் தற்போது கிராம ஊராட்சிகளில் உள்ள நீர்நிலைகளை புனரமைப்பு செய்து நீர் ஆதாரத்தை பெருக்குவதாகும்.

## திட்டத்தின் குறிக்கோள்கள்

1. தாய் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் பணிகள் மூன்று விதமாக வகைப்படுத்தப்படுகின்றன.
2. குறைந்தப்பட்ச அடிப்படை தேவைகள், கூடுதல் தேவைகள் மற்றம் இதர பணிகள்
3. சிறிய நீர் பாசன குளங்களை புனரமைப்பு செய்து நீர் நிலைகளில் தண்ணீர் ஆதாரத்தை பெருக்குதல்.
4. கிராம ஊராட்சியிலுள்ள உள்ள தனிநபர் குடியிருப்புகளில் உள்ள தனிநபர் ஒருவருக்கு 40 லிட்டருக்கும் குறைவாக குடிநிர் விநியோகிக்கப்படும் குக்கிராமங்களை கண்டறிந்து அவற்றை மேம்படுத்தும் வகையில் மின் விசை இறைப்பான், குடிநீர் குழாய் விரிவாக்கம், தற்போது உள்ள குடிநீர் ஆதாரத்தினை பெருக்கும் போன்ற பணிகள் செய்யப்படுகிறது.

5. தெருவிளக்குக்கள் இல்லாத ஊராட்சிகளை கண்டறிந்து அவற்றிற்கு புதிய கம்பத்துடன் கூடிய தெருவிளக்குகள் மற்றும் ஏற்கானவே உள்ள மின் கம்பங்களுக்கு தெரு விளக்குகள் பொறுத்துதல்.
6. கிராமபுறங்களில் உள்ள குடியிருப்புகளை இணைக்கும் வகையில் சிமெண்ட் சாலை அல்லது பேவர் பிளாக், சாலைகள் அமைக்கப்படுகின்றன.
7. ஒரு கிராம ஊராட்சி அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குக்கிராமங்களை இணைக்கும் இணைப்பு சாலைகளாக தார் சாலையாக அமைக்கப்படுகிறது.

**திட்டத்தின் பயன்கள்**

1. தாய் திட்டம் – 2ன் மூலம் மேற்கொள்ளப்படும் குடிநீர் பணிகளால் குடிநீர் தட்டுப்பாடு நீங்கி குடிநீர் அனைவருக்கும் கிடைக்கும் வகையில் இருக்கும்.
2. சிறிய குளங்கள் புனரமைப்பு செய்வதன் மூலம் குளங்களில் தண்ணீரை சேமித்து வறட்சிகாலங்களில் விவசாயத்திற்கு பயன்படுத்தலாம்.
3. சாலை பணிகள் மேற்கொள்ளவதன் மூலம் சாலை வசதி இல்லா கிராம ஊராட்சிகள் சாலை பெற்று போக்குவரத்திற்கு பெரிதும் உதவும்.

**2016-2017 ம் நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் விபரம்**

| வ.எண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு(ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | சேலம் | 19 | 64.750 |
| 2 | வீரபாண்டி | 12 | 0.000 |
| 3 | பனமரத்துப்பட்டி | 15 | 0.000 |
| 4 | அயோத்தியாப்பட்டணம் | 24 | 52.360 |
| 5 | வாழப்பாடி | 17 | 81.150 |
| 6 | எற்காடு | 6 | 0.000 |
| 7 | பெத்தநாயக்கன்பாளையம் | 23 | 40.530 |
| 8 | ஆத்துர் | 14 | 15.000 |
| 9 | கெங்கவல்லி | 5 | 0.000 |
| 10 | தலைவாசல் | 12 | 0.000 |
| 11 | கொளத்துர் | 15 | 47.510 |
| 12 | நங்கவள்ளி | 20 | 33.820 |

| | | | |
|---|---|---|---|
| 13 | மேச்சேரி | 10 | 0.000 |
| 14 | ஓமலூர் | 33 | 45.380 |
| 15 | தாரமங்கலம் | 25 | 6.750 |
| 16 | காடையாம்பட்டி | 22 | 21.000 |
| 17 | சங்ககிரி | 23 | 72.770 |
| 18 | எடப்பாடி | 17 | 0.000 |
| 19 | கொங்கணாபுரம் | 20 | 0.000 |
| 20 | மகுடஞ்சாவடி | 14 | 64.460 |
| | **மொத்தம்** | **346** | **545.480** |






